பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 04 2024 7 15
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

1. மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 88 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்வது இன்று நிறைவடைகிறது.

2. நாட்டைப் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல பிஜேபி உறுதிபூண்டுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாக்க காங்கிரஸ் உறுதிபூண்டுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி கூறியுள்ளார்.

4. கோடை காலத்தில் வெய்யிலில் பணியாற்றக் கூடியவர்கள் உரிய முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா அறிவுறுத்தியுள்ளார்.

5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி – கேரள அணியை வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 மக்களவைத் தொகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் இம்மாதம் 26-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

கேரளாவில் 12 தொகுதிகள், கர்நாடகாவில் 14 தொகுதிகள், ராஜஸ்தானில் 13 தொகுதிகள், உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 8 தொகுதிகள், மத்திய பிரதேசத்தில் 7 தொகுதிகள், அசாம் மற்றும் பீகாரில் தலா 5 தொகுதிகள், மேற்கு வங்கம் மற்றும் சத்தீஸ்கரில் தலா மூன்று தொகுதிகள், மணிப்பூர், திரிபுரா மற்றும் ஜம்மு-காஷ்மீரில் தலா ஒரு தொகுதியிலும் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

இந்த தொகுதிகளில் தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுக்கள் நாளை பரிசீலினைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீரில் மட்டும் வேட்புமனுக்களின் பரிசீலனை நாளை மறுநாள் நடைபெறுகிறதுஏப்ரல் 26-ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

[]<<<>>>[]

இதற்கிடையே நாடு முழுவதும் முதல்கட்ட மற்றும் இரண்டாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று பீகாரில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்கிறார்.

ஜமுய் மாவட்டத்தின் கைராவில் உள்ள பல்லோபூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றுகிறார்.

நாட்டைப் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல பிஜேபி உறுதிபூண்டுள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவரும் பாதுகாப்புத் துறை அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாதில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர், 2027 ஆம் ஆண்டுக்குள் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக வளர்ச்சியடையும் என்று தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

உத்திரபிரதேச மாநிலம் முசாபர்நகரில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித்ஷா, விவசாயிகளின் நலனுக்கு பிஜேபி அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதாகக் கூறினார்.

முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் சிறைக்கு செல்வதை யாராலும் தடுக்க முடியாது என்று அவர் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தைப் பொறுத்தவரை மாநிலத்தில் சமூக விரோதச் செயல்களை பெருளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாக்க காங்கிரஸ் கட்சி உறுதிபூண்டுள்ளதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் வயநாட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வயநாட்டைப் பொறுத்தவரை மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் இடையேயான மோதல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை என்று கூறினார்,

வயநாடு பகுதியின் வளர்ச்சியில் மாநில அரசு அக்கறை காட்டவில்லை என்றும் திரு ராகுல் காந்தி குற்றம்சாட்டினார்.

இதனிடையே வயநாட்டில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு டி ராஜா, வயநாடு தொகுதியின் வளர்ச்சியில் திரு ராகுல் காந்தி கவனம் செலுத்தவில்லை என்று குற்றம்சாட்டினார்.

பிஜேபி அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் திரு ராகுல்காந்தி, தேர்தலின்போது இடதுசாரி கட்சிகளுக்கு எதிராக நடந்து கொள்வதாக திரு டி ராஜா தெரிவித்தார்.

[]<<<>>>[]

செல்வி மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சி மக்களவைத் தேர்தலுக்கான மூன்றாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் 12 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் மொத்தமுள்ள 80 மக்களவைத் தொகுதிகளில் 37 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை பகுஜன் சமாஜ் கட்சி அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சியின் இரண்டாவது வேட்பாளர் பட்டியலை அக்கட்சித் தலைவர் திரு உத்தவ் தாக்கரே மும்பையில் நேற்று வெளியிட்டார்.

இதில் நான்கு தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவிகள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள்) -22 செகண்ட்ஸ்)*

தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டத்தில் கடலில் அலைச்சறுக்கு விளையாட்டின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேகா ) ---40—செகண்ட்*

[]<<<>>>[]

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு இன்று மும்பை செல்கிறார்.

மும்பை ஐ ஐ டி-யில் புற்று நோய்க்கான நாட்டின் முதல் மரபணு சிகிச்சையை அவர் தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

நாட்டின் பல பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு வெப்பம் அதிகரித்துக் காணப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு உள்கர்நாடகா, ஒடிசா, மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், தெலுங்கானா மற்றும் கடலோர ஆந்திராவில் வெப்ப அலைவீச வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று நாட்களில் நாட்டின் கிழக்குப் பகுதியில் பல இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே வடகிழக்கு மாநிலங்களில் ஓரிரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருணாச்சல பிரதேசத்தில் அதிக மழை மற்றும் பனிப்பொழிவு இருக்கும் அது கூறியுள்ளது.

[]<<<>>>[]

கோடை காலத்தில் வெய்யிலில் பணியாற்றக் கூடியவர்கள் உரிய முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா அறிவுறுத்தியுள்ளார்.

வெப்பம் அதிகரித்து காணப்படும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதை அடுத்து மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுதில்லியில் நேற்று அவர் மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் வெப்பத்தின் தாக்கத்தை சமாளிக்க போதுமான அளவு தண்ணீர் மற்றும் பழச்சாறுகளை பருக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வெய்யில் காரணமாக பாதிக்கப்படும் மக்களுக்கு அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் முறையான சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில அரசுகளை திரு மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் 29-வது கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களின் நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளை ஆணையத்தின் தலைவர் திரு எஸ் கே ஹல்தர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நதிநீர் பங்கீட்டின்படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீர் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும் என தெரிகிறது.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் சென்னை வந்தடைந்தனர்.

இவர்கள் அனைவரும் அவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

புதிய சைனிக் பள்ளிகள் அரசியல் அல்லது சித்தாந்த அடிப்படையில் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுவதாக வெளியான தகவல்களை பாதுகாப்பு அமைச்சகம் மறுத்துள்ளது.

இதுபோன்ற குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

தற்போது 33 சைனிக் பள்ளிகள் இருப்பதாகவும், நாட்டில் கூடுதல் சைனிக் பள்ளிகளுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அது தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி – கேரள அணியை வென்றது.

கொச்சியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் ஈஸ்ட்பெங்கால் அணி நான்கு – இரண்டு என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

[]<<<>>>[]

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி 106 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

அகமதாபாத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

இந்த ஆண்டு தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் ஐந்தாம் தேதி தொடங்கும் இப்போட்டி சென்னை, நெல்லை, கோவை, திண்டுக்கல், சேலம் ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளது.

சென்னையில் ஆகஸ்ட் மாதம் நான்காம் தேதி இறுதிப்போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*End of News*